சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் நடத்தும்

# பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள்

# இணைய வழியில் நடைபெறுகிறது

சென்னை, ஆக. 11-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:-

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவை கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள இந்திய தொழில்துறை கூட்டமைப்புடன் இணைந்து 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்புவரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள், கல்லூரி மாணவர்களுக்கான 'இந்தியா-75 இளைஞர் மாநாடு' மற்றும் சென்னை தினத்தை (22-ந் தேதி) கொண்டாடிடும் வகையில், 'சென்னை காட் டேலண்ட்' போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை இணைய வழியில் நடத்த உள்ளது.

தற்போது பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் சென்னை காட் டேலண்ட் ஆகியவற்றுக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

பள்ளிகளுக்கு இடையிலான போட்டி களுக்கான பதிவுகள் 12-ந் தேதி (வியாழக்கிழமை) முடிவடைகிறது மற்றும் சென்னை காட் டேலண்டுக் கான பதிவுகள் 15-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முடிவடைகிறது. 'இந்தியா- 75 இளைஞர் மாநாடு' போட்டி 12-ந் தேதி நடைபெறுகிறது.

மேற்கூறிய போட்டிகளில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள், பதிவு செய்ய மற்றும் கூடுதல் விவரங்களை கீழே உள்ள இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

- பள்ளிகளுக்கு இடையிலான போட்டிக்கு https://yiyuva.in/ schools/
- 'இந்தியா -75 இளைஞர் மாநாடு' போட்டிக்கு https://youngindians.glueup.com/event/youth-conclave- the future-41514/
- சென்னை காட் லேடண்ட் போட்டியில் பதிவு செய்ய மற்றும் வீடியோ பதிவேற்றம் செய்ய https://yiyuva.in/cgt/

மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இணைய வழியில் நடைபெறும் இந்த போட்டிகளில் அதிகளவில் பங்குபெற்று இந்த நிகழ்ச்சிகளை சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.